# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 13.07.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 13467/SCIC/2024**

திருமதி தனலட்சுமி மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
நேர்முக உதவியாளர் (மறுவாழ்வு), ....... பொதுஅதிகார அமைப்பு
அயலகத் தமிழர் மற்றும் மறுவாழ்வுதுறை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை 600 005

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை 600 001

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 22.07.2024 |
| 2, | மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மாற்றம் செய்யப்பட்ட நாள் | 25.07.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 04.09.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 18.10.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 11.09.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், மறுவாழ்வு இயக்குநர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 22.07.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு புலம்பெயர்ந்த தாயகம் திரும்பியோர்க்கு 1984ல் அப்போதை தமிழக அரசால் பாலவாக்கம் கிராமம் பெருங்குடியில் ஏதேனும் மறுவாழ்வு குடியிருப்பு வழங்கப்பட்டதா, அவ்வாறு வழங்கப்பட்டிருப்பின் மேற்படி குடியிருப்பின் புலஎண் விவரங்கள் என்பது போன்று தகவல்களை 3 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் தனது உறவினர் திரு பாண்டியன் என்பவருடன் ஆஜரானார். திரு வெ. கோவிந்தசாமி பொதுத் தகவல் அலுவலர் / நேர்முக உதவியாளர், அயலகத் தமிழர் மற்றும் மறுவாழ்வு துணை ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை என்பவர் 09.07.2026 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பிய மின்னஞ்சல் கடிதத்தில் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தன்னால் இன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலவில்லையென்று தெரிவித்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை சார்பில் திருமதி லதா, வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் 22.07.2024 தேதியிட்ட மனுவானது சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 25.07.2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை என்ற முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டு, அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லை. எனவே, 25.07.2024 அன்று மனுதாரரின் மனுவினைப் பெற்றபோது பொறுப்பிலிருந்த அப்போதைய **பொதுத் தகவல் அலுவலர் திருமதி C. சரஸ்வதி, தற்போது Enrica Distilleries, ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி, திருவள்ளூர் என்பவர் மனுதாரரின் மனுவிற்கு எந்தவித தகவல்களும் வழங்கப்படாத காரணத்திற்காக அவர்மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான தனது விளக்கத்தினை நேரடியாகவோ அல்லது தனது பிரதிநிதி ஒருவர் மூலமாகவோ 07.08.2026 அன்று ஆணையத்தில் நேரில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

4. மனுதாரரின் பிரதான கோரிக்கை தனது பெயரில் பட்டா வழங்குவது குறித்ததாகும், மேலும், அக்கோரிக்கை தொடர்பாக தற்போது சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்துள்ளதாகவும் விசாரணையின்போது தெரிவித்தார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை அவர்கள் மனுதாரருக்கு கடிதம் அனுப்பி, தங்கள் அலுவலகத்திற்கு நேரில் வரவழைத்து, மனுதாரர் குறிப்பிட்ட பட்டா வழங்குவது தொடர்பான மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, அதுகுறித்த தகவல்கள் / மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் ஆகியவற்றை 31.07.2026 தேதிக்குள்**

**மனுதாரருக்கு வழங்குமாறும், அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் 07.08.2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13467/SCIC/2024</u>**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்,
நேர்முக உதவியாளர் (மறுவாழ்வு)
அயலகத் தமிழர் மற்றும் மறுவாழ்வுதுறை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை 600 005

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை 600 001

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

திருமதி C. சரஸ்வதி,
**Enrica Distilleries,**
ஸ்ரீபெரும்புதூர்,
பூந்தமல்லி, திருவள்ளூர் **(முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை)**

**மனுதாரர்**
திருமதி தனலட்சுமி,
க/பெ சதாசிவம்,
5/1020, 1வது குறுக்குத்தெரு,
இலங்கை தமிழர் குடியிருப்பு,
பாலவாக்கம் கிராமம்,
பெருங்குடி, சென்னை 600 096

நகல்
மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை 600 001

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
**சென்னை** 600 035

TK/PS